பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 09 ஞாயிற்றுக்கிழமை 21.02.2021 கதிர் 339

## யாழ். டயலொக் நிறுவனத்தின் ஓர் ஊழியருக்குக் கொரோனா

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள டயலொக் நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் பணியாற்றும் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் அந்த நிறுவன அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டது.

4

# பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஜெனிவாச் சமர் நாளை ஆரம்பம்

## வருகின்றது இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணை



கொழும்பு, பெப். 21

ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நாளை 22ஆம் திகதி திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகின்றது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இம்முறை காணொளி ஊடாகவே இந்தக் கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மார்ச் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத் தொடரில் உலக நாடுகளின் மனித உரிமை நிலைமை தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதுடன் இலங்கை குறித்து விவாதம் ஒன்றும் நடைபெறவுள்ள நிலையில் புதிய பிரேரணை ஒன்றும் தாக்கல் செய்யப்படவுள்ளது.

2

## ஆதரவு திரட்டும் பணியில் இலங்கை அரசு முழு மூச்சு

### மோடியின் பதிலுக்காகக் காத்திருப்பு



ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வில் தமக்கு ஆதரவாக நாடுகளை அணி திரட்டும் முயற்சியில் இலங்கை முழு மூச்சாகஈடுபட்டுவருகின்றது.

இது தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் ஒரு சிறப்புக் கோரிக்கையை முன்வைத்துள்ள இலங்கை, அவரின் பதிலுக்காகக் காத்திருக்கின்றது என இலங்கையின் வெளியுறவுச் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு சாதகமான பதில் கிடைக்கும் என நம்புவதாகவும்

2

## சந்திரிகா, மைத்திரி, சஜித்தை இணைத்துக்கொண்டு ஐ.நா. சவாலை எதிர்கொள்ள வேண்டும் கோட்டா அரசு

### அரசிடம் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து







இறுதிக்கட்டப் போரின்போது 40ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ஏற்கமுடியாது. அத்துடன், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரையும் இணைத்துக் கொண்டு ஜெனிவாப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கு கோட்டாபய

2

## இலங்கையில் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்டோருக்குத் தடுப்பூசி ஏற்றல்!

இலங்கையில் கடந்த 29 ஆம் திகதி முதல் நேற்றுவரை மூன்று லட்சத்து 2 ஆயிரத்து 857 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவால் இலங்கைக்கு 5 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. முதற்கட்டமாக கொரோனா ஒழிப்பு சமரில் முன்கள பணியாளர்களாக செயற்படும் சுகாதார மற்றும் பாதுகாப்பு பிரிவினருக்கு கொரோனாத் தடுப்பூசி கடந்த 29 ஆம்

2

## ஒரு கோடி கொரோனாத் தடுப்பூசிகளை இந்தியாவிடமிருந்து வாங்கும் இலங்கை

### புனே சீரம் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

இந்தியாவிடமிருந்து ஒரு கோடி அளவிலானகொவிஷீல்டுகொரோனாத் தடுப்பூசி மருந்துகளைப் பெற புனே சீரம் நிறுவனத்துடன் இலங்கை ஒப்பந்தம் செய்துள்ளது.

இலங்கையில் 79

4

## தமிழ் தேசியப் பேரவை 28 ஆம் திகதி உதயம்!

### 10 தேசியக் கட்சிகள் சங்கமம் என்கிறார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



தமிழ் தேசியக் கட்சிகள் அனைத்தையும் இணைத்து 'தமிழ் தேசியப் பேரவை' ஒன்றை உருவாக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர

4

### ஈஸ்டர் தாக்குதல் பிரதான சூத்திரதாரி சஹ்ரானிடம்

## தற்கொலைக் குண்டுதாரிகளாக 15 பெண்கள் சத்தியப்பிரமாணம்

### விசாரணையில் தெரியவந்துள்ளது என்கிறார் பொலிஸ் பேச்சாளர்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாகக் கருதப்படும் சஹ்ரான் ஹாசிம் 15 பெண்களைத் தற்கொலை குண்டுதாரிகளாக வழிநடத்தியுள்ளார் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சஹ்ரான் தலைமையில் இடம்பெற்ற அடிப்படைவாத போதனைகளில் கலந்து கொண்ட

2

## பேரா. துரைராஜா விருது பட்டமளிப்பின்போது இல்லை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும் பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கப் பரிசில்கள் இம்முறை இடைநிறுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு

4

## பிரஜாவுரிமையைப் பறித்தாலும் ஓயமாட்டோம்!

### ராஜபக்ஷ அரசுக்கு ஜே.வி.பி. கடும் எச்சரிக்கை



ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் குரலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஒடுக்க முடியாது. பிரஜாவுரிமையை இல்லாது செய்தாலும், எம்மைச் சிறையிலடைத்தாலும் வாழ்வின் இறுதி வரை எமது போராட்டம் தொடரும்.

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின்

2

## புதிய தமிழ்க் கட்சி கண்டியில் உதயம்

### அடுத்த மாதம் விசேட கூட்டம்

கண்டியில் மலரவுள்ள புதிய அரசியல் கட்சியின் விசேட கூட்டம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் கம்பளையில் நடைபெறவுள்ளது.

கட்சி கட்டமைப்பு, பதவி நிலைகள், யாப்பை இறுதிப்படுத்தல், அமைப்பாளர்கள்

2

## தற்கொலைக் குண்டுதாரிகளாக ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குற்றச்சாட்டுக்காக மாவனல்லைப்பகுதியைச் சேர்ந்த 24 வயதான மொஹமட் இப்ராஹிம் சைதா என்ற யுவதி கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

இதன்போது அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே இந்த விடயங்கள் தெரியவந்துள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் சஹ்ரான் 15 பெண்களைத் தற்கொலை குண்டுதாரிகளாக உருவாக்க முயற்சித்தார் எனவும், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து தனது வகுப்புகளில் கலந்துகொண்ட 15 பெண்களும் எந்த நேரத்திலும் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தத் தயார் என உறுதிமொழி எடுத்ததாகவும் குறித்த பெண் வாக்குமூலமளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 2018 ஆம் ஆண்டில் கத்தான்குடியில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளதுடன் இந்த வகுப்புகளில் 15 பெண்கள் பங்கேற்று வந்தமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அவர்களில் 5 பேர் சாய்ந்தமருது தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மூன்று பெண்கள் சிறை வைக்கப்பட்டுள்ளதுடன் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் உட்பட 7 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

சாஹ்ரான் ஹாசிமிடம் பயிற்சி பெற்றதாகக் கூறப்படும் 6 பெண்கள் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 7ஆம் திகதி கைதி செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே வாக்குமூலமளித்த குறித்த பெண் கடந்த வெள்ளியன்று கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரஜாவுரிமையைப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ஜனநாயக ரீதியாகச் செயற்படுகின்றவர்களுக்கு எதிராகவும், அவர்களுக்குச் சவால் விடுக்கும் வகையிலும் ஜனாதிபதி நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷவால் விசித்திரமான ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. எமது குடும்பம் சார்ந்த மோசடிகளில் யாரும் தலையிடாதீர்கள் என்று எச்சரிக்கும் வகையிலேயே இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான எமது குரலை முடக்குவதற்கு முயற்சித்தால் வாழ்நாளின் இறுதி வரை அதனை எதிர்த்துப் போராட நாம் தயாராகவுள்ளோம் என ஜனாதிபதியிடம் கூறிக்கொள்கின்றோம்.

எமதுகுரலைஒடுக்கும்போராட்டத்தில் கோட்டாபய ராஜபக்சவால் வெற்றிபெற முடியாது. அவரை நாம் தோற்கடிப்போம். பிரஜாவுரிமையை நீக்கினாலும் எமது போராட்டம் தொடரும். ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் போராட்டத்தில் பிரஜாவுரிமை எமக்குப் பெரிதல்ல.

1983 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, மக்கள் விடுதலை முன்னணியினரின் பிரஜாவுரிமையை நீக்கினார். ஆனால், எமது செயல்பாடுகளை அவராலும் முடக்க முடியவில்லை.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட 22 பேரின் பிரஜாவுரிமையை நீக்குமாறு கூறப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்சவுக்கு வேறு என்ன செய்வதென்று புரியாமல் இவ்வாறு செய்ய முற்படுகின்றார். அவருக்கு நாட்டை நிர்வகிக்கத் தெரியவில்லை. தமது இயலாமையை அவர்கள் புரிந்து கொள்ளும்போது, உண்மையை வெளிப்படுத்தும் அரசியல்வாதிகளின் குரலை முடக்க முயற்சிக்கின்றனர். - என்றார்.

## புதிய தமிழ்க் கட்சி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நியமனம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதியகட்சியின்மத்தியசெயற்குழுவில் இடம்பெறவுள்ளவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

கண்டி மாவட்டத்தை மையப்படுத்தி இயங்கவுள்ள இந்தக் கட்சியின் பின்னணி யில் பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவரே செயற் படுகின்றார் எனவும், முக்கியமான சிவில் அமைப்புகள் இந்தக் கட்சியுடன் இணைந்துசெயற்படவுள்ளன எனவும் தெரியவருகின் றது.

கடந்த பொதுத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் சுயேட்சையாகப் போட்டியிட்ட சில வேட்பாளர்களும் இந்தக் கட்சியில் இணைந்து பயணிக்க தமது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

கண்டி மாவட்டத்தை பிரதான தளமாக இயங்குவதற்குத் திட்டமிட்டுள்ள இந்தக் கட்சி, மாத்தளையிலும் தமது அரசியல் பணிகளை முன்னெடுக்கும் என முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## இலங்கையில் மூன்று ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திகதி முதல் ஏற்றப்பட்டது.

29ஆம் திகதி 5 ஆயிரத்து 286 பேருக்கும், 30ஆம் திகதி 32 ஆயிரத்து 539 பேருக்கும், 31 ஆம் திகதி 21 ஆயிரத்து 329 பேருக்கும், பெப்ரவரி முதலாம் திகதி 36 ஆயிரத்து 396 பேருக்கும், 2 ஆம் திகதி 23 ஆயிரத்து 217 பேருக்கும், 3 ஆம் திகதி 21 ஆயிரத்து 147 பேருக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

அத்துடன், 4ஆம் திகதி 6 ஆயிரத்து 413 பேருக்கும், 5ஆம் திகதி 9 ஆயிரத்து 983 பேருக்கும், 6ஆம் திகதி 3 ஆயிரத்து 838 பேருக்கும், 7ஆம் திகதி 1,625 பேருக்கும், 8ஆம் திகதி 5 ஆயிரத்து 989 பேருக்கும், 9ஆம் திகதி 6 ஆயிரத்து 431 பேருக்கும், 10ஆம் திகதி 2 ஆயிரத்து 532 பேருக்கும், 11ஆம் திகதி 1,362 பேருக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

12 ஆம் திகதி ஆயிரத்து 110 பேருக்கும், 13 ஆம் திகதி 7 ஆயிரத்து 457 பேருக்கும், 14 ஆம் திகதி 2 ஆயிரத்து 695 பேருக்கும், 15 ஆம் திகதி 3 ஆயிரத்து 589 பேருக்கும், 16ஆம் திகதி 3 ஆயிரத்து 225 பேருக்கும், 17 ஆம் திகதி 14 ஆயிரத்து 242 பேருக்கும், 18 ஆம் திகதி 23 ஆயிரத்து 67 பேருக்கும், 19 ஆம் திகதி 30 ஆயிரத்து 307 பேருக்கும், 20 ஆம் திகதி 39 ஆயிரத்து 78 தடுப்பூசி ஏற்றப்பட்டது.

## சந்திரிகா, மைத்திரி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசு முன்வரவேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், ஐ.நா. பொதுச்செயலாளராக செயற்பட்ட பான் கீ - மூனும் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிட்டனர். அதன் விளைவாகவே தாருஸ்மன் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை நாம் ஏற்கவில்லை. 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படும் விடயத்தை நிராகரிக்கின்றோம். போரின்போது சிற்சில சம்பவங்கள் இடம்பெறக்கூடும்.

அதனை அடிப்படையாகக்கொண்டு படையினர் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதை ஏற்கமுடியாது. அதேபோல் உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசம் தலையிடுவதையும் நாம் அனுமதிக்கமாட்டோம். எந்நேரத்திலும் நாட்டுக்காக முன்னிலையாவதற்கு தயாராகவே இருக்கின்றோம்.

அதேவேளை, போர்க்காலத்தில் ஜனாதிபதியாக பதவி வகித்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் இருக்கின்றனர். மைத்திரிபால சிறிசேனவும் இருக்கின்றார். இவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் இணைத்துக்கொண்டு ஜெனிவாச் சவாலை எதிர்கொள்வதற்கான திட்டத்தை அரசு வகுக்கவேண்டும். அதைவிடுத்து ஜெனிவா விவகாரத்தை அரசியல் மயப்படுத்துவது தான் சிக்கல்களை உருவாக்குகின்றது - என்றார்.

## ஆதரவு திரட்டும் பணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜயநாத் கொலம்பகே தனியார் தொலைக்காட்சி ஒன்றிடம் கூறியுள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் ஒப்பந்தத்திலிருந்து இலங்கை விலகிக்கொண்டதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது என அவதானிகள் கருதுகின்றனர்.

அத்தோடு வட - இலங்கையில் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ள எரிசக்தித் திட்டங்கள் இந்தியாவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நடவடிக்கை எனவும் இந்தியா கருதுகின்றது.

இந்நிலையில், ஐ.நாவில் இலங்கைக்கு ஆதரவளிக்கும் கோரிக்கைக்கு இந்தியா எத்தகைய பதிலை வழங்கும் என்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்வைக்க ஐந்து (Core Group) நாடுகள் தயாராகி வருகின்றன.

இதேவேளை, ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவு இம்முறையும் இலங்கைக்குக் கிடைக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன நம்பிக்கை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெரும் எதிர்பார்ப்புக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, 23 ஆம் திகதி மாலை வேளையில் அல்லது 24ஆம் திகதி காலையில் இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன உரையாற்றவிருக்கின்றார். அமைச்சர் தினேஷ் குணவர்தன கொழும்பில் இருந்தவாறு இணைய வழியில் ஜெனிவா சபையில் உரையாற்றவுள்ளார்.

முதல் மூன்று நாள்கள் பிரதான ஆரம்ப அமர்வுகள் இடம்பெறவுள்ளன. 22ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஆரம்ப அமர்வுகளில் பல நாடுகள் உரையாற்றவுள்ளன. அதாவது பல நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் ஆரம்ப அமர்வில் உரையாற்றவுள்ளனர். முக்கியமாக அமெரிக்கா, சீனா, இந்தியா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் ஆரம்ப அமர்வில் உரையாற்றுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

அத்துடன் ஜேர்மனி, தென்னாபிரிக்கா, டென்மார்க், சுவீடன், ஜப்பான், பெல்ஜியம், ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் சபை அமர்வில் உரையாற்றவுள்ளனர். மேலும், 22 ஆம் திகதி நடைபெறும் அமர்வில் சீனாவின் வெளியுறவு அமைச்சர் வாங் லீ உரையாற்றவுள்ளதுடன் 23ஆம் திகதி அமர்வில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உரைநிகழ்த்தவிருக்கிறார். இதன்போது இலங்கைவிவகாரம் குறித்து பிரஸ்தாபிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.,

அமெரிக்காவின் சார்பில் அந்நாட்டின் புதிய இராஜாங்க செயலர் அன்டி ஜே. பிலிங்கன் மற்றும் பிரிட்டன் சார்பில் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் டொமினிக் ராப் ஆகியோர் உரையாற்ற ஏற்பாடாகியுள்ளது.

மேலும், முதல்நாள் அமர்வில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். மனித உரிமைகள் ஆணையாளரின் முதல் உரையின்போதும் இலங்கை குறித்து பிரஸ்தாபிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, சீன மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் 22ஆம் திகதி மற்றும் 23ஆம் திகதிகளில் உரையாற்றும்போது இலங்கை தொடர்பாக பிரஸ்தாபிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக சீனா உரையாற்றும்போது தாம் இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக இதன்போது பிரஸ்தாபிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலும் மேற்குறிப்பிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றும்போது இலங்கையின் விவகாரம் குறித்தும் கருத்து வெளியிடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று இந்தியாவின் சார்பில் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் இந்தச் சபை அமர்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதும் இலங்கை தொடர்பான தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், இலங்கை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உரையாற்றும்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை நிராகரிப்பார் என்றும், அது தவறான தகவல்களைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது என்று உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே இலங்கை அரசானது அந்த அறிக்கையை நிராகரித்து 18 பக்க அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு அனுப்பி வைத்திருக்கின்றது.

இது இவ்வாறு இருக்க இம்முறை 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக மற்றுமொரு புதிய பிரேரணை பிரிட்டன், கனடா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளினால் கொண்டுவரப்படவுள்ளது. தற்போது அந்த அறிக்கையின் உள்ளடக்கங்கள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வரைவில் தமிழர் தரப்பில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சர்வதேச நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. ஆகியோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஆனால், இம்முறை புதிய பிரேரணை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்படும் பட்சத்தில் அதனை இலங்கை முழுமையாக நிராகரிக்கும் என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பாக வாக்கெடுப்பை இலங்கை கோரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. வாக்கெடுப்பைக் கோரும் பட்சத்தில் சீனா உள்ளிட்ட நாடுகள் இலங்கையை ஆதரிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஆதரவு வழங்குவதாக சீனா இலங்கையிடம் உறுதியளித்திருக்கின்றது. அந்தவகையில் இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரானது இலங்கைக்கு முக்கியத்துவம் மிக்கதாக அமைந்திருக்கின்றது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டு இலங்கையால் இணை அனுசரணை வழங்கப்பட்ட 30 .1 என்ற பிரேரணை பின்னர் 2017ஆம் ஆண்டில் 34.1 என்றும், பின்னர் 2019 ஆம் ஆண்டில் 40/1 என்றும் நீடிக்கப்பட்டது. அந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் முன்னைய நல்லாட்சி அரசு அனுசரணை வழங்கியது. ஆனால், 2019இல் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசு 2020 ஆம் ஆண்டு அனுசரணையை மீளப் பெற்றது. அந்தவகையிலேயே இம்முறை புதிய பிரேரணை கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வெளியானது பிரேரணை

**ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்படவிருக்கும் நகல் பிரேரணையின் வடிவம் வெளியே கசிந்துள்ளது.**

**நாளை இந்தப் பிரேரணை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் மைய அலுவலகத்துக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளது.**

**பிரிட்டன், ஜேர்மன், கனடா, மென்ரிநிக்ரோ, வடக்கு. மஸிடோனியா ஆகிய நாடுகளின் சார்பில் ஜெனிவாவில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் இந்தப் பிரேரணை வடிவத்தை நாளை கையளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

**சில தினங்களுக்கு முன்னர் கசிந்த பிரேரணை வடிவத்தில் அதற்குப் பின்னரும் ஓரிரு சொல்லாடல் மாறுதல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று தெரிகின்றது.**

**நாளை அது சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும் கூட அது விவாதத்துக்கும் பரிசீலனைக்கும் ஜெனிவா அமர்வில் அடுத்த மாதம் எடுக்கப்படுவதற்கு இடையில் அவ்வப்போது அதன் வடிவத்தில் சிறு சிறு மாற்றங்கள் இடம்பெறுவதற்கு தாராள வாய்ப்புண்டு. ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளின் கருத்துரைகள், ஆதரவு, எதிர்பார்ப்புகளுக்க அமைய இந்தப் பிரேரணை வடிவம் அவ்வப்போது மாற்றப்படுவதற்குத் தாராளமாக இடமுண்டு.**

**ஆனாலும் –**

**அந்தப் பிரேரணையின் முழு வடிவமும் உத்தியோகபூர்வமாக வெளிவருவதற்கு முன்னரே அது பற்றிய விமர்சனங்களும் வெளியாகத் தொடங்கி விட்டன.**

**⁎ இலங்கை விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்கும் ஏற்பாடு ஏதும் இந்தப் பிரேரணை வடிவத்தில் இல்லை.**

**⁎ இலங்கைத் தமிழர்களின் எதிர்கால நிலைமை குறித்து அவர்களே தீர்மானிக்க வழி செய்யும் விதத்திலான சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று இங்கு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏதும் இந்தப் பிரேரணை வடிவத்தில் இல்லை.**

**– என்பன போன்ற பல குற்றச் சாட்டுகள் இப்போதே அடுக்கத் தொடங்கப்பட்டு விட்டன.**

**ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் பிரேரணையில் இடம்பெறவேண்டிய அம்சங்கள் என்ற ஒரே கோரிக்கையுடன் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு இங்கிருந்து மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஜெனிவா அலுவலகத்துக்கு அனுப்பி வைத்த கடிதம் அங்கு கிடைத்து விட்டது என்ற பதில் தகவல் கிடைத்தது.**

**ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகளின் கோரிக்கைக் கடிதத்தில் வெளிப்படையாக இருந்த பல அம்சங்கள் இப்போது பிரேரணையின் நகல் வடிவமாக வெளியாகியுள்ள ஆவணத்தில் இல்லை.**

**இதனால் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஜெனிவா அரங்கு தொடர்பில் தமது முணுமுணுப்பை இப்போது ஆரம்பிக்கத் தொடங்கி விட்டன.**

**ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ன விடயத்தை வலியுறுத்தினாலும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகள் கவுன்ஸிலுக்கு உள்ள அதிகார வரம்புக்குள் மட்டுமே செயல்பட முடியும்.**

**தமிழ்த் தேசியக் கட்சிகள் தமது ஒன்றுபட்ட கோரிக்கைக் கடிதத்தில் முன்வைத்து விடயங்களில் பல மனித உரிமைகள் கவுன்ஸிலின் அதிகார வரம்புக்கு உட்பட்டவை அல்ல என்பது அந்தக் கடிதத்தை தமிழ்த் தேசியக் கட்சிகள் கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகளுக்கு அனுப்பியபோதே பேசப்பட்டவைதான்.**

**இலங்கை விவகாரத்தை சர்வதேச நீதிமன்றுக்கு பரிந்துரைக்கும் நியாயாதிக்கம் மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குக் கிடையாது என்பதுதான் உண்மை.**

**அதுபோல தமிழர் தலைவிதியைத் தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு என்ற விடயத்தையும் அது கோர முடியாது. அதற்கும் கவுன்ஸிலுக்கு அதிகாரம் இல்லை.**

**எனினும் தமிழர் தரப்பு எதிர்பார்த்த சில முக்கிய விடயங்களை இந்தப் பிரேரணை நாசூக்காகக் கொண்டிருப்பதும் அவதானிக்கத்தக்கது.**

**OP4, OP5, OP6 என்ற வாசகங்களின் ஊடே அவை சொல்லப்பட்டுள்ளன.**

**⁎ பொறுப்புக் கூறல் பொறிமுறைக்கான ஏற்பாட்டைதான் கையாள்வதினின்றும் விலகிக் கொண்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில், அதனை இன்னொரு காத்திரமான கட்டமைப்பு கையாள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.**

**⁎ பொறுப்புக் கூறல் தொடர்பான ஆதாரங்கள், சாட்சியங்களைப் பாதுகாத்துப் பகுப்பாய்ப்பு செய்வதற்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தின் திறனை அதிகரிக்கக் கோருவதன் மூலம் அதற்கான புதிய பொறிமுறைக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.**

**⁎ பொறுப்புக் கூறலை நிலைநாட்ட சாத்தியமான உத்திகளை உருவாக்கக் கோருவது இது தொடர்பில் பரந்த அளவிலான கட்டமைப்புக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்பாகும்.**

**– இவ்வாறு பல காத்திரமான அம்சங்களும் இந்தப் பிரேரணையில் இருப்பது மறுக்கற்பாலதல்ல.**

# சீனாவின் செயற்பாடுகள் தொடர்பாக இந்தியா பயப்படத் தேவையில்லை!

## இப்படிக் கூறுகின்றார் சரத்வீரசேகர



இலங்கையில் சீனா இராணுவக் குவிப்பை செய்யவில்லை. ஆகவே, தேசிய பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி இந்தியா அச்சமடையத் தேவையில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தமிழ் நாளிதழொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த நேர்காணலில் சரத் வீரகேசர மேலும் கூறியுள்ளதாவது, 'எந்த நாட்டினதும் நேரடி அரசியல் தலையீடுகள் எமக்கில்லை.

சீனாவுடன் நாம் நல்லதொரு நட்புறவில் உள்ளோம் என்பதற்காக இந்தியாவுடன் நட்புறவை நாம் முறித்துக்கொள்ளவில்லை. அவர்களுடனும் வர்த்தக, கலாசார ரீதியிலான உறவு கையாளப்படுகின்றது.

ஆனால் இந்தியா இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட முயற்சிகள் எடுத்தால் அதுவே உறவை முறிக்கவும் காரணமாக அமைந்துவிடும்.

அத்துடன் இலங்கை - இந்திய உறவு 13 ஆம் திருத்தத்தில் தங்கியிருக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இதேவேளை, வெறுமனே தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு நாட்டின் அபிவிருத்தியை கைவிட முடியாது. நாட்டுக்கு அபிவிருத்தி அவசியமானது.

பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைய வேண்டும் என்றால் இவ்வாறான தீர்மானங்களை நாம் முன்னெடுத்தாக வேண்டும்.

இலங்கையில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மட்டுமே சீனா முன்னெடுக்கின்றது. மாறாக அவர்களின் இராணுவம் இங்கு குவிக்கப்படவில்லை.

இலங்கையின் கடல் எல்லை பாதுகாப்பு எப்போதுமே இலங்கை வசமே இருக்கும். அம்பாந்தோட்டையாக இருந்தாலும் யாழ்ப்பாணமாக இருந்தாலும் கடல் எல்லையை இலங்கை கடற்படையே பாதுகாக்கும்.

இந்த விடயத்தில் இந்தியா அச்சமடைய வேண்டிய எந்தவித அவசியமும் இல்லை. சீனாவால் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எதுவும் இல்லை. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கில் மேலும் இருவருக்கு கொரோனா தொற்று கண்டறிவு!

வடக்கு மாகாணத்தில் மேலும் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று (சனிக்கிழமை) 442 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதில், மன்னார் பொது வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட, மன்னார் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

மற்றொருவர், பூநகரி வலைப்பாடு பகுதியில் தொற்று கண்டறியப்பட்டவர்களுடன் நேரடித் தொடர்புடையவர் என மருத்துவர் கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

# 3 லட்சத்து 2 ஆயிரத்து 857 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு விட்டது!

இலங்கையில் இதுவரை 3 லட்சம் 2 ஆயிரத்து 857 பேருக்கு ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசி மருந்து செலுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில், நேற்று (சனிக்கிழமை) மாத்திரம் 39 ஆயிரம் 78 பேருக்கு ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசி மருந்து செலுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று புதிதாக, 528 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள், அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 79 ஆயிரம் 480 ஆக அதிகரித்துள்ளது.

# கிராமத்துடன் உரையாடல் வேலைத்திட்டம் எதிர்த்தரப்பினரை அச்சப்பட வைக்கின்றது!

## ஜனாதிபதி கோட்டா பெருமிதம்



அரச தலைவர் நேரடியாக மக்களிடம் சென்று அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து தீர்வை வழங்குவதால், தமக்கான வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்று எதிர்த்தரப்பினர் அஞ்சுகின்றனர். அதனால் தான் 'கிராமத்துடன் உரையாடல்' வேலைத்திட்டம் தொடர்பில் மக்கள் மத்தியில் போலியான பிரசாங்கள் முன்னெடுக்கப்படுகின்றனவென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிராமத்துடன் கலந்துரையாடல் வேலைத் திட்டத்துக்கமை நேற்று சனிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருவெலகஸ்வெள பிரதேசத்திற்கு சென்று, அங்குள்ள மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

'கிராமத்துடன் உரையாடல்' வேலைத் திட்டம் தொடர்பில் எதிர்தரப்பால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அரச தலைவரொருவர் மக்களை நேரடியாகச் சென்று அவர்களது குறைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கு தீர்வை வழங்குவதால், அவர்களுக்கான வாய்ப்புக்கள் இல்லாமல் போய்விடும் என எதிர்த்தரப்பினர் அஞ்சுகின்றனர்.

அவர்கள் இவ்வாறு அஞ்சும் போதும் இந்த வேலைத்திட்டத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும். இதன் போது நான் கூறும் விடயங்கள் பலராலும் தவறாகத் திரிபுபடுத்தப்படுகின்றன. நான் செல்கின்ற அனைத்து இடங்களிலும் காணிகள் தொடர்பில் காணப்படுகின்ற பிரச்சினை பிரதானமாகக் காணப்பட்டது. பாரம்பரிய இடங்களில் வெள;வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஆலோசனைகளும் உரியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாறாக, காடுகளை அழிப்பதற்கு யாருக்கும் அனுமதியளிக்கப்படவில்லை. மரத்தில் ஒரு கிளை வெட்டப்பட்டாலும் உரிய அதிகாரிகள் உடனடியாக அதனை தடுத்து நிறுத்த வேண்டும். - என்றார்.

# மும்பையில் கொரோனாப் பரவலை கட்டுப்படுத்த 984 கட்டடங்களுக்கு சீல்

மகாராஷ்டிராவில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிக்க தொடங்கி உள்ளது. இதில் நேற்று மாநிலத்தில் புதிதாக 6 ஆயிரத்து 281 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டது.

இதனால் மாநிலத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 லட்சத்து 93 ஆயிரத்து 913 ஆக அதிகரித்து உள்ளது. நேற்று 2 ஆயிரத்து 567 பேர் பாதிப்பில் இருந்து குணமானார்கள்.

இதுவரை 19 லட்சத்து 92 ஆயிரத்து 530 பேர் தொற்று பாதிப்பில் இருந்து மீண்டு ஆஸ் பத்திரியில் இருந்து வீடு திரும்பி உள்ளனர்.

தற்போது 48 ஆயிரத்து 439 பேர் சிகிச்சைபெற்று வருகின்றனர். இதேபோல மேலும் 40 பேர் ஆட்கொல்லி நோய்க்கு பலியானார்.

இதனால் தொற்றுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 51 ஆயிரத்து 753 ஆகி உள்ளது. தொற்று பாதித்தவர்களில் 95.16 சதவீதம் பேர் குணமடைந்து உள்ளனர். 2.47 விகிதம் பேர் பலியாகி இருக்கிறார்கள். மாநிலத்தில் இதுவரை 1 கோடியே 56 லட்சத்து 52 ஆயிரத்து 742 பேருக்கு கொரோனா சோதனை செய்யப்பட்டுள்ளது. இதில் 13.38 சதவீதம் பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தலைநகர் மும்பையில் கொரோனா பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதில் நேற்று நகரில் 897 பேருக்கு பாதிப்பு கண்டறியப்பட்டது.

மேலும் 3 பேர் பலியாகி உள்ளனர். நகரில் இது வரை 3 லட்சத்து 18 ஆயிரத்து 207 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 11 ஆயிரத்து 438 பேர் உயிரிழந்து உள்ளனர்.

இதற்கிடையே மும்பை மாநகராட்சி கடந்த 2 நாளில் 984 கட்டிடங்களுக்கு சீல் வைத்து உள்ளது. கடந்த 18ஆம் திகதி நிலவரப்படி மும்பையில் தொற்று பரவலை கட்டுபடுத்த 321 கட்டிடங்களுக்கு மட்டுமே சீல் வைக்கப்பட்டு இருந்தது. இந்த எண்ணிக்கை நேற்று 1,305 ஆக அதிகரித்து உள்ளது. நகரில் நோய் பரவல் இரட்டிப்பாகும் காலமும் 371 நாள்களாக குறைந்து உள்ளது.

## பேரா. துரைராஜா விருது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்தமாக பீட மட்டத்திலும், பல்கலைக் கழக மட்டத்திலும் கல்வி, விளையாட்டு, கலை, கலாசாரம் உட்பட சகலதுறைகளிலும் சிறந்த மாணவன் ஒருவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்படுகின்றமை வழமையாகும்.

இம்முறை கலைப் பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறந்த மாணவனுக்கான பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கம், பல்கலைக் கழக மட்டத்தில் சகல துறைகளிலும் சிறந்த மாணவனுக்கான பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கம் ஆகிய விருதுகளுக்காகக் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் ஊடகத் துறையைச் சேர்ந்த மாணவன் ஒருவருக்கு சிறந்த மாணவனுக்கான பல்கலைக்கழக மட்ட விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்பின், மெய்யியல் துறை மாணவன் ஒருவரிடம் இருந்து துணைவேந்தருக்குக் கிடைத்த மேன்முறையீட்டின் அடிப்படையிலும், ஆதாரங்களின் அடிப்படையிலும் விசேட மூதவைக் கூட்டம் கூட்டப்பட்டு மெய்யியல் துறை மாணவன் விருதுக்கு உரியவராக அறிவிக்கப்பட்டார்.

எனினும், மெய்யியல் துறை மாணவனுக்கு எதிராக மாணவர் தரப்பில் இருந்து மேன்முறையீடுகளும், ஆதாரங்களும், புதிய சாட்சியங்களும் கிடைத்த வண்ணம் இருக்கின்றமையால், விருதுக்குரியவரைத்தெரிவு செய்வதற்குக் கால அவகாசம் போதாமையால் விருது வழங்கல் இடைநிறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய விசாரணைகள் இடம்பெற்று பிறிதொரு விழாவில் இந்த விருது வழங்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒரு கோடி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 400 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

முன்னதாக இந்தியா வழங்கிய 5 இலட்சம் டோஸ் கொரோனாத் தடுப்பூசிக ளைக் கொண்டு இலங்கையில் தடுப்பூசி திட்டம் தொடங்கப்பட்டு இருக்கின்றது.

இந்தத் தடுப்பூசித் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள ஒரு கோடி கொவிஷீல்டு தடுப்பூசி மருந்துகளை இந்தியாவிடம் இருந்து இலங்கை வாங்கத் திட்டமிட்டுள்ளது.

## குஜராத்தில் 6 மாநகராட்சிகளுக்கான தேர்தல் குடும்பத்துடன் வாக்களித்த அமைச்சர் அமித்ஷா



குஜராத்தில் ஆறு மாநகராட்சிகளுக்கான உள்ளாட்சித் தேர்தல் வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு துவங்கி நடந்து வருகிறது.

அகமதாபாத்,சூரத், வடோதரா, ராஜ்கோட், ஜாம்நகர் மற்றும் பவநகர் மாநகராட்சிகளுக்கு இந்த தேர்தல் நடக்கிறது. இந்த 6 மாநகராட்சிகளிலும் மொத்தம் 575 வார்டுகள் உள்ளன. பாஜக, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் மற்றும் ஆம் ஆத்மி கட்சிகளை சேர்ந்த மொத்தம் 2276 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

தேர்தல் பாதுகாப்பு பணியில் சுமார் 43 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சுமார் ஒரு கோடியே 14 லட்சம் வாக்காளர்கள் இந்த தேர்தலில் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளனர்.அகமதாபாத் மாநகராட்சி தேர்தலில் வாக்களிப்பதற்காக உள்துறை அமைச்சர் அமித்ஷா நேற்றிரவே குஜராத் வந்து சேர்ந்தார். இன்றைய தினம் அகமதாபாத் மாநகராட்சியில் குடும்பத்தினருடன் வந்து வாக்களித்தார் அமித்ஷா.

## தமிழ் தேசியப் பேரவை ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த தமிழ் தேசியக் கட்சிகளின் கூட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ் தேசிய பசுமை இயக்கம் உள்ளிட்ட கட்சிகள் கலந்துகொண்ட அதே வேளை, கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கலந்துகொள்ளவில்லை.

இன்றைய கூட்டம் தொடர்பாக சுரேஷ் பிறேமச் சந்திரன் தெரிவிக்கையில் -

தமிழ் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய 10 கட்சிகள், தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் முதலாவது வரைவு மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றியும் பல விடயங்களை ஆராய்ந்துள்ளோம்.

இந்தக் கூட்டத்தில், முக்கியமாக இரண்டு விடயங்கள் பேசப்பட்டன. இதன்படி, எதிர்வரும் 26 ஆம் திகதி வவுனியாவில் தமிழ் தேசியப் பரப்பில் இருக்கக் கூடிய தமிழ் கட்சிகளும், வடக்கு கிழக்கில் இருக்கக் கூடிய கிறிஸ்தவ ஆயர்கள், ஆதீன முதல்வர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து கலந்துரையாடவுள்ளோம்.

அதில், முக்கியமாக தமிழ் மக்களுடைய அரசியல் கோரிக்கைகள், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான பொறுப்புக்கூறல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஐ.நாவின் முதலாவது வரைவில் சரியான முறையில் பிரதிபலிக்கப்படவில்லை. அது தமிழ் மக்களுக்கு ஏமாற்றம் அளிக்கின்ற விடயமாக சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆகவே, வரைவு என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஒரு சரியான தீர்வைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். அந்த விடயங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை. தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய பல கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு முக்கியமான மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இருந்தார்கள்.

ஆனால், அந்த முதலாவது வரைவில் அவை உள்ளடக்கப்படவில்லை. எனவே, வரும் 26 ஆம் திகதி அடுத்தக்கட்டமாக இதற்கு என்ன செய்வது என்பது பற்றி ஆராய்வதற்காக ஒன்றுகூடிப் பேசவுள்ளோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொறுப்புக் கூறுதல் தீர்வு என்பவை முக்கியமானவை என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். இது சர்வதேச அரசியலுக்கு அப்பால் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனித உரிமைகள், பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வுகள், பொறுப்புக்கூறல் போன்றவற்றை சர்வதேச சமூகம் உண்மையாக உணர்ந்து அந்த அடிப்படையில் ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும்.

அடுத்த கட்டமாக தற்போது நாங்கள் 10 கட்சிகள் கூடி பேசிக் கொண்டிருக்கின்றோம். தமிழர் தரப்பில் இருக்கக் கூடிய ஏனைய கட்சிகள்கூட இணையலாம்.

நாங்கள் இந்த பத்துக் கட்சிகளையும் மிகவிரைவாக, ஒரு தமிழ் தேசியப் பேரவையாக உருவாக்குவதற்கான கோரிக்கை இப்பொழுதும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அந்த கோரிக்கை இங்கு வந்திருந்த அனைத்துக் கட்சியினராலும் பேசப்பட்டது.

எனவே, இந்த விடயம் குறித்து பேசப்படவுள்ளதுடன், எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மீண்டும் கூடி தமிழ்த் தேசியப் பேரவை உருவாக்குவது பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

ஆகவே, எதிர்வரும் 28 ஆம் திகதி, 'தமிழ்த் தேசியப் பேரவை' உருவாக்கப்படுவதுடன், அந்தப் பேரவை தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டக்கூடிய சாத்தியப்பாடான முடிவுகளை எடுப்பதற்காகச் செயற்படும்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ். டயலொக் நிறுவனத்தின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் பணியாற்றுபவர்களுக்கு கொழும்பு தனியார் வைத்தியசாலை ஊடாக பி.சி. ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப் பட்டன. அதன் முடிவே நேற்று அனுப்பப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் பணியாற்றுபவர் கள் அனைவரையும் சுயதனிமைப்படுத்தும் பணிகளை மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர்கள் முன்னெடுத்துள்ளனர்.

சுயதனிமைப்படுத்தப்படுபவர்களுக்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டால் கடந்த சில தினங்களில் வாடிக்கையாளர் சேவை நிலையத்துக்குச் சென்ற பொதுமக்களும் அடையாளம் காணப்பட்டு அவர்களும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உள்படுத்தப்படுவார்கள் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

டயலொக் நிறுவனம் தமது பணியாளரை ஒவ்வொரு மாதமும் பரிசோதனைக்கு உள்படுத்துகின்றது. அதனை தனியார் வைத்தியசாலை ஊடாக அந்த நிறுவனம் முன்னெடுக்கிறது.

அதனடிப்படையிலேயே யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள பணியாளர்கள் அனைவரிடமும் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவருக்கு மாத்திரம் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

''சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். அவரை கொவிட் - 19 சிகிச்சை நிலையத்துக்கு மாற்றவும் நெருங்கிய தொடர்பாளர்களை சுயதனிமைப்படுத்தும் நடவடிக் கையும் முன்னேடுக்கப்படுகிறது.

“அந்த நிறுவனத்தின் ஸ்ரான்லி வீதி அலுவலகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது - என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத் துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# ஆப்கானிஸ்தானின் தலைநகரில் நடந்த குண்டுவெடிப்பில் ஐந்து பேர் உயிரிழப்பு



காபூல், பெப். 21

ஆப்கான் தலைநகர் காபூலில் வெவ்வேறு பகுதிகளில் நிகழ்ந்த 3 குண்டுவெடிப்பில் பொதுமக்கள் 5 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டில், சமீபத்தில் அரசு அதிகாரிகள், நீதிபதிகள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் மீதான தாக்குதல் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், ஆப்கானின் அரசியல் தலைவரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான Mohammad Mohaqiq என்பவருடைய காரில் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்துச் சிதறியது.

இதேபோன்று மற்ற பகுதிகளிலும் நடந்த குண்டு வெடிப்பில் 5 பேர் வரை பலியாகினர்.

## டெக்ஸாஸ் மாகாண பனிப்பொழிவை பெரும் பேரழிவு என பைடன் அறிவிப்பு

டெக்ஸாஸ் மாகாணத்தில் பெய்து வரும் பனிப்பொழிவை பெரும் பேரழிவு என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

டெக்ஸாஸ் மாகாணத்தில் கடும் பனிப்பொழிவு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. குடிதண்ணீர் அனைத்தும் உறைந்துவிட்டதால் அப்பகுதியில் 13 மில்லியன் மக்கள் குடிதண்ணீருக்காக அவதிப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

தொடரும் பனிப்பொழிவால் இதுவரை 60க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் மின்சாரம் தடைபட்டுள்ளதால் மக்கள் பெரும் துயருக்கு ஆளாகி உள்ளனர்.

இதுகுறித்து வெள்ளை மாளிகை விடுத்துள்ள அறிக்கையில், கடும் குளிரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள் உதவி செய்யவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ரஷ்யாவில் மனிதர்களுக்கு முதன்முறையாக பரவியது பறவை காய்ச்சல் நோய்

ரஷ்யாவில் பறவைகளிடம் இருந்து முதன்முறையாக மனிதர்களுக்கு H5N8 என்ற புதிய வகை காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டு இருப்பது அதிர்வலைகளை உண்டாக்கி உள்ளது.

இதுதொடர்பாக பேசிய அந்நாட்டின் சுகாதார கண்காணிப்பு குழு தலைவர் Anna Popova, வெக்டர் ஆய்வகத்தின் விஞ்ஞானிகள் தெற்கு ரஷ்யாவில் உள்ள ஒரு கோழிப் பண்ணையில் 7 தொழிலாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட மரபணுக்களை ஆராய்ச்சிக்கு உட்படுத்தியதில் இந்த முடிவுகள் தெரிய வந்துள்ளதாக கூறினார்.



ஆனால் அவர்கள் அனைவரும் எந்தவொரு கடுமையான பாதிப்புளையும் சந்திக்கவில்லை என்றார். இந்த காய்ச்சல் பற்றிய தகவல்கள் அனைத்தும் உலக சுகாதார அமைப்பிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## பொருளாதாரத் தடைகளை அமெ. விரைவில் நீக்கும்! ஈரான் நம்பிக்கை

பொருளாதாரத் தடைகள் விரைவில் அமெரிக்கா நீக்கும் என நம்புவதாக ஈரான் தெரிவித்துள்ளது.

அணு ஆயுத சோதனை மோதலில் தங்கள் மீதான பொருளாதாரத் தடையை அமெரிக்கா நீக்க வேண்டும் என ஈரான் ஒரு பக்கம் கோரியிருக்க, எங்களது நிபந்தனைகளுக்கு ஈரான் கட்டுப்பட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் ஈரான் அரசு செய்தித் தொடர்பாளர் ,'அமெரிக்கா எங்கள் மீதான பொருளாதாரத் தடைகளை விரைவில் நீக்கும் என்று நம்புகிறோம்.' -எனத்தெரிவித்துள்ளார்.

சில நாள்களுக்கு முன்னர், அனைத்து விதிமுறைகளுக்கும் ஈரான் ஒப்புக்கொண்டால் அணு ஆயுத ஒப்பத்தத்தில் இணைவதில் அமெரிக்கா தயாராக இருக்கிறது என்பதில் ஜோ பைடன் தெளிவாக இருக்கிறார் எனவும், ஈரானுடனான தங்களது உறவை மேம்படுத்தும் வாய்ப்பாக இதனைக் கருதுவோம் எனவும் ஜோ பைடன் நிர்வாகம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா உள்ளிட்ட 6 வளர்ந்த நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த 2015 இல் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி ஆக்கபூர்வத் தேவைகளுக்கு யுரேனியம் செறிவூட்ட ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் அந்நாடு எவ்வளவு யுரேனியம் இருப்பு வைத்துக் கொள்ளலாம், எந்த அளவுக்கு அதைச் செறிவூட்டலாம் என்ற வரம்பு விதிக்கப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதியாக றொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளன எனக் கூறி அதிலிருந்து விலகினார்.

## கூட்டத்தில் முக கவசத்தை தேடி ஓடிய ஜேர்மனி பிரதமர்; வைரலாகும் வீடியோ



ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் நாடாளுமன்ற கூடத்தில் முகக்கவசம் அணிய மறந்ததால், பதறி போய் மாஸ்க்கை தேடி ஓடிய வீடியோ காட்சி சமூகவலைத்தளங்களில் அதிக அளவில் பகிரப்பட்டு வருகிறது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பின் தான் முக கவசம் அணியாமல் இருப்பதை உணர்ந்து, அதனை தேடி விரைந்த காட்சிகள் படம்பிடிக் கப்பட்டுள்ளது. உலக அளவில் பரவி இருக்கும் கொரோனாவைக் கட்டுப்படுத்த முக்கிய நடவடிக்கை யாக முகக் கவசம் அணிவது இருந்து வருகிறது.

இதன் காரணமாகவே உலக நாடுகள் அனைத்தும் பொதுவெளியில் வரும் குடிமக்கள் முகக்கவசம் அணியவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளன.

## அமெ. இராணுவ ஜெட் விமானம் விபத்து: இரு விமானிகள் பரிதாபமாக உயிரிழப்பு



அமெரிக்காவில் ராணுவ ஜெட் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர்.

14வது படைப்பிரிவைச் சேர்ந்த வீ -38 ரக விமானத்தில் விமானிகள் நேற்று மாலை பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தனர். மிசிசிப்பியில் உள்ள கொலம்பஸ் விமானத்தளத்திலிருந்து புறப்பட்ட இந்த விமானம் புளோரிடாவின் டல்லாஹஸ்ஸிக்கு செல்வதாக இருந்தது.

இந்நிலையில் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக விமானம் கீழே விழுந்து வெடித்துச் சிதறியது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த இரு விமானிகள் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அவர்களின் விவரங்களை விமானப்படை வெளியிடவில்லை.

## இராணுவ ஆட்சிக்கு எதிராக தொடர் போராட்டம்: கலவர பூமியாகும் மியான்மார்; மேலும் இருவர் பலி

மியான்மரில் ராணுவ ஆட்சிக்கு எதிராக நடந்த போராட்டத்தில் இரண்டு பேர் சுட்டு கொல்லப்பட்டு உள்ளனர். இது குறித்து விவரிக்கிறது இந்த செய்தி தொகுப்பு.

மியான்மர் நாட்டில் தேர்தல் முறைகேடு காரணமாக இராணுவம் ஆட்சியை கைப்பற்றியிருப்பதால், அந்நாட்டு மக்கள் கொந்தளிப்பில் உள்ளனர். தினந்தோறும் நூதன போராட்டங்களில் ஈடுபட்டு இராணுவ ஆட்சிக்கு எதிரான தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் மாண்டேலா நகரில் நடந்த போராட்டத்தில் மக்கள் ராணுவ ஆட்சியை கண்டித்தும், ஆங்சான் சூகியை விடுதலை செய்யக் கோரியும் பதாகைகள் ஏந்தியும், கோங்கள் எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ராணுவ வீரர்களுக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள், ராணுவ வீரர்கள் மீது பட்டாசுகளை வீசியும், கையில் கிடைத்தவைகளை கொண்டு எறிந்து உள்ளனர்.

இதையடுத்து ராணுவ வீரர்கள் கண்ணீர் புகை வீசியும், தண்ணீர் பீய்ச்சி அடித்தும், தடியடி நடத்தியும் ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டி அடித்தனர். மேலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினர்.

ராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டில் கப்பல் தள பகுதியை சேர்ந்த இரண்டு பேர் ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் படுகாயம் அடைந்த மக்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ராணுவ வீரர்களின் வெறிச்செயலால் மாண்டேல நகர சாலைகள் கலவர பூமி போல் காட்சி அளித்தன.

ஏற்கனவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் ராணுவ வீரர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த நிலையில் தற்போது மேலும் 2 பேர் உயிரிழந்த சம்பவம் அந்நாட்டு மக்களிடையே கூடுதல் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

# போராட்டத்தில் பங்கேற்றோரை விசாரிப்பது மக்கள் போராட்டத்தை நிராகரிப்பதற்கு சமன்!

## இராதாகிருஷ்ணன் எடுத்துரைப்பு



போராட்டத்தில் கலந்துகொண்டவர்களை விசாரிப்பது மக்கள் போராட்டத்தை நிராகரிப்பதாகும் என நுவரெலியா மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டம் என்பது ஜனநாயக போராட்டமாகும்.

ஆனால் தற்போது அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களை விசாரிப்பது மக்கள் போராட்டத்தை நிராகரிப்பதாகும்.

இதேவேளை, அமைச்சர் விமல் வீரவன்ஸ அரசாங்கததுக்கு உள்ளேயே இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பது ஒரு நாடகமாகும்.

மேலும் இந்தியாவை பகைத்துக் கொண்டு ஏனைய நாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வது ஆபத்தானது. ஆகவே, நண்பனை பகைத்துக் கொண்டு செயற்படுவதை மாற்றிக்கொள்ள வேண்டும். - என மேலும் தெரிவித்துள்ளார்.

# ஒரு லட்சத்து 50 ஆயிரம் சீன சுற்றுலா பயணிகள் 6 மாதங்களில் வருவார்கள்!

இந்த வருடத்தின் இறுதி அரையாண்டில் சீனாவில் இருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கோஹணை தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் இவற்றுக்கான விமானப் பயணங்களை ஏற்பாடு செய்கின்றமை தொடர்பாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனவும் கலாநிதி பாலித கோஹணை சுட்டிக் காட்டினார்.

சீனாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றும் கலாநிதி பாலித கோஹணை அங்கு பல்வேறு தரப்புக்களை சந்தித்து பேச்சு நடத்தி வருகின்றார்.

வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் வர்த்தக பிரதிநிதிகள் சுற்றுலாத் துறை முகவர் நிலையங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு துறையினரை அவர் சந்தித்து பேச்சு நடத்தி வருகிறார்.

இந்நிலையில் இது தொடர்பில் பீஜிங்கில் இருந்தவாறு சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கோஹணை மேலும் குறிப்பிடுகையில் -

தற்போது சுற்றுலாத்துறை பாரிய பாதிப்புக்களை சந்தித்திருக்கின்றது. இந்நிலையில் சுற்றுலாத் துறையை மீளக் கட்டியெழுப்ப வேண்டியது அனைவரினதும் கடமையாகும். முக்கியமாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை எதிர்வரும் காலங்களில் இலங்கைக்கு வரவழைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையில் மில்லியன் கணக்கான மக்கள் இந்த சுற்றுலாத்துறையில் தங்கி வாழ்கின்றனர். எனவே, அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதற்காக நாம் சுற்றுலாத்துறையை செயற்படுத்தவேண்டிய தேவை காணப்படுகின்றது.

அந்தவகையில் வருடத்தின் இறுதி ஆண்டில் சீனாவில் இருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன்.

அதற்கான ஏற்பாடுகள் தற்போது துரித கதியில் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கான விமான பயணங்களை ஏற்பாடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதாவது ஆறு மாத காலத்தில் சீனாவில் இருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருவார்கள். அதன் ஊடாக எமக்குப் பாரியதோர் அந்நிய செலாவணி நாட்டுக்குள் வரும். அதுமட்டுமன்றி சீனாவிலிருந்து வருடமொன்றுக்கு 159 மில்லியன் மக்கள் சுற்றுலாப் பயணிகளாக வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

அதில் ஒரு வீதத்தை இலங்கைக்கு எடுத்துக்கொண்டாலும் இலங்கையின் பொருளாதாரம் பாரிய முன்னேற்றத்தை அடைந்து விடும்.

எனவே, நாம் அந்த அடைவு மட்டத்தை அடைவதற்காகப் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். எனவே, இந்த ஆண்டின் இறுதி அரையாண்டில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் சீன சுற்றுலா பயணிகள் இலங்கை வருவார்கள்என்பதைஉறுதியாகக்கூறுகின்றேன். - என்றார்.

# கத்தோலிக்க எம்.பிக்கள் பேராயரை சந்திக்க முடிவு!


ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி கத்தோலிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்திக்கத் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் உட்பட நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக இதன்போது பேராயரிடம் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சமூகம் சார்ந்து தவிசாளரை தெரிக!

## முஸ்லிம்களுக்கு சிறிநேசன் அறிவுரை



புதிய தவிசாளர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில் சமூகம் சார்ந்து தீர்மானங்களை எடுக்க வேண்டுமென முஸ்லிம் உறுப்பினர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொங்கு சபைகளாகக் காணப்பட்ட சில சபைகளில் புதிய தவிசாளர்களைத் தெரிவு செய்யும் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில் வாகரை மற்றும் செங்கலடிப் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் தெரிவு நடைபெற்று முடிந்துள்ளது.

எனினும், ஆரையம்பதி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு வரும் மார்ச் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. அந்தச் சபையிலுள்ள 17 உறுப்பினர்களில் ஐவர் முஸ்லிம் சகோதர்களாவர். இந்த உறுப்பினர்கள் ஐவரும் ஒற்றுமையாகத் தமது சமூகம் சார்ந்து தீர்மானம் எடுக்கவுள்ளதாகக் கூறியுள்ளனர். இது நல்ல விடயமாகும்.

ஆனால், முக்கியமான விடயம் என்னவென்றால், முஸ்லிம் சகோதர்களின் சமூகப் பிரச்சினையில் எரிதழலாக இப்போது இருப்பது கொரோனா வைரஸின் தாக்கத்தால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கின்ற விடயமாகும்.

இதனை, நூறு வீத முஸ்லிம் சகோதர்கள் எதிர்க்கின்றார்கள். அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதனை எதிர்க்கின்றது. அத்துடன், பொத்துவில் முதல் பொலிகண்டி வரை என்ற மக்கள் எழுச்சிப் பேரணியில் 10 அம்சக் கோரிக்கைகளில் ஜனாஸா எரிப்பு விடயமும் ஒன்றாகும். இதற்கு முஸ்லிம் சகோதர்கள் பெருமளவில் திரண்டு ஆதரவளித்தார்கள். இந்த விடயம், தமிழ் பேசும் மக்களை இணைப்பதாகவும், ஒற்றுமைப்படுத்துவதாகவும் அமைந்தது.

இதேவேளை, தற்போதைய நிலையில், ஆரையம்பதி பிரதேச சபை தவிசாளர் தெரிவில், முஸ்லிம் உறுப்பினர்களின் முன்பு இரண்டுதெரிவுகள்தான் உள்ளன.

அதாவது, ஜனாஸாவை எரிப்பதற்கு எதிராகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பது. மற்றையது, ஜனாஸாவை எரிப்பதற்கு ஆதரவாகவுள்ள அர சாங்கம் சார்ந்த தமிழ் மக் கள் விடுதலைப் புலிகள் கட்சிக்குவாக்களிப்பது ஆகும்.

இந்நிலையில், தமது சமூகம் சார்ந்து சிந்திக்கும் முஸ்லிம் உறுப்பினர்கள் ஜனாஸா எரிப்புக்கு எதிரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சார்பாக வாக்களிப்பார்கள் என நம்புகின்றோம். முஸ்லிம் தலைவர்களும் அதற்குரிய சரியான நெறிப்படுத்தலை செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை, வாகரைப் பிரதேச சபையில் முஸ்லிம் உறுப்பினர்கள் ஜனாஸா எரிப்புக்கு ஆதரவான அரசாங்கம் சார்ந்தவர்களுக்கு வாக்களித்தமை வேதனைக்குரிய விடயமாகும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.02.2021இல் வெளியிடப்பெற்றது.